No. of Printed Pages : 8

பதிவு எண் | M | A | R | 2 | 0 | 1 | 8 |

# பகுதி I – பொதுத் தமிழ் இரண்டாம் தாள்

நேரம் : 2.30 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(2) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி - I

பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை தருக : 20x1=20

**1.** அமிர்தம் போல் வர்ஷித்த மழை கண்டு ஜனங்கள் சந்தோஷம் அடைந்தார்கள்.
(வடமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

**2.** கண்ணகி தெய்வத்திற்கு கயவாகு மன்னன் பத்தினி கோட்டம் எடுத்து சிறப்பித்தான்.
(வல்லின மெய்களை இட்டு எழுதுக)

**3.** ரெயின் வாட்டர் ஹார்வெஸ்ட் பற்றி எல்லார்க்கும் சொல்வோம்.
(ஆங்கிலச் சொல்லை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

[ திருப்புக

4. ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

5. பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்.
(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக)

6. ஒலி – ஒளி.
(பொருள் வேறுபாடறிக)

7. சாயந்தரம் நேரத்தோடு வராட்டி அம்மா திட்டும்.
(கொச்சைச் சொற்களைத் திருத்துக)

8. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
(வாக்கியப் பிழையை நீக்குக)

9. த.நா.மி.வா.
(விரிவாக்கம் தருக)

10. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர் வற்றாது.
(எழுத்துப் பிழைகளை திருத்தி எழுதுக)

11. ஐயனே நான் போகலாற்றேன் ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன் என்று கூறினான் குகன்.
(பொருத்தமான நிறுத்தக் குறியீட்டு எழுதுக)

12. மரகடை பக்கம் போகாதே இழைபுளி தூசி ஒவ்வாது.
(வல்லின மெய்களை இட்டு எழுதுக)

13. நாளை ரதோத்ஸவம் ஆதலால் ஸகல காரியாலயங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

(கலப்பு நடையைத் தவிர்த்து நல்ல தமிழில் எழுதுக)

14. ஊன் – ஊண்.

(பொருள் வேறுபாடறிக)

15. ஊறுக்காய் வைத்தால் பழையச்சோறு உள்ளேப் போகாதோ ?

(வல்லின மெய்களை நீக்கி எழுதுக)

16. காலை – காளை.

(மயங்கொலி அறிந்து பொருள் தருக)

17. இன்றும் நம் நாட்டில் பெறுவாரியான மக்கல் உள்ளார்கலே.

(தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக)

18. மனைக்கு விளக்காக விளங்குபவர் மகளிர்.

(ஏற்ற வினா அமைக்கவும்)

19. கண்ணப்பனும், குகனும் இறையன்பிலே தலை நின்ற பெருமக்கள்.

(இவ்வாக்கியத்தில் பயின்றுவரும் இலக்கிய சுவை யாது)

20. 'முத்தமிழ்'.

(தொகைச் சொல்லை விரித்து எழுதுக)

[ திருப்புக

## பகுதி - II

பின்வரும் வினாக்களுள் வினா எண் 30 **-க்கு கட்டாயம்** விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 21 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் **எவையேனும் ஆறனுக்கு** மட்டும் விடை தருக : **7x2=14**

**21.** ஔவையார் கல்வியின் சிறப்பாகக் கூறுவது யாது ?

**22.** பொருட்சுவை ஒன்பதை கூறுக.

**23.** பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யார் ?

**24.** கங்கைவேடன் இறைவனுக்கு அளித்த காணிக்கைகள் யாவை ?

**25.** தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் இளமையில் கேட்டதாகக் கூறும் முடிமக்கள் கதைகள் யாவை ?

**26.** ஓய்வு குறித்து அறிஞர் அண்ணா கூறுவன யாவை ?

**27.** திருமூலர் காட்டும் அன்பு நெறி யாது ?

**28.** அன்பு நெறி பற்றிப் புத்தபிரான் கூறுவன யாவை ?

**29.** கல்வெட்டுத் துறையால் தமிழர்க்குக் கிடைத்த நலங்கள் யாவை ?

**30.** பண்டைத் தமிழக மக்களின் இறைவழிபாட்டு முறையை நெடுநல்வாடை எவ்வாறு குறிப்பிடுகிறது ?

## பகுதி - III

பின்வரும் வினாக்களுள் வினா எண் 40 -க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 31 முதல் 39 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக : 7x3=21

31. பெண் கல்வியை வலியுறுத்தி அடிகளார் உரைப்பனவற்றை தொகுத்து எழுதுக.

32. பழந்தமிழரின் படைமாட்சி குறித்து ஆசிரியர் எழுதியிருப்பன யாவை ?

33. சுவை என்பதற்கு விளக்கம் யாது ?

34. இராமனை வெல்லக் கருதிப் படைகொண்டு வந்ததாகக் கருதிய கங்கை வேடனின் வீரமொழிகள் யாவை ?

35. திருவள்ளுவரின் ஒழிபியல் பற்றி ஆசிரியரின் கருத்தை விளக்குக.

36. ஓய்வு நேரத்தை பயன்படுத்தும் முறை யாது ?

37. உழைப்பால் ஏற்பட்ட உள்ளத்தேய்வை நீக்கும் முறை குறித்து அண்ணா கூறுவன யாவை ?

38. சமயங்களின் ஒருமித்த குரல் என குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை ?

39. சிலாசாசனங்கள் எனப்படுவன யாவை ?

40. முதுகுடி மகளிரின் வீரம் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை ?

[ திருப்புக

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **7x5=35**

**41.** ''ஒரு நாள் கழிந்தது'' என்னும் கதையை கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

**அல்லது**

''மறுமணம்'' என்னும் கதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**42.** ''செங்கமலமும் ஒரு சோப்பும்'' என்னும் கதையில் கௌரிக் குட்டியின் பாத்திரத்தை ஆராய்க.

**அல்லது**

''சங்கரன்'' பாத்திரத்தை ஆய்க.

**43.** நாணா அத்தைக்கும் கைலாசத்திற்கும் நடந்த உரையாடலை எழுதுக.

**அல்லது**

'ஒரு பிரமுகர்' கதைப் பகுதியை நாடக வடிவில் எழுதுக.

**44.** ''என்றைக்கும் ஆபத்து பிக்பாக்கெட்'' என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சியவன் மனந்திருந்தி உயர்ந்ததாக உம் கற்பனைத் திறத்தினால் ஒரு கதை எழுதுக.

**அல்லது**

புரொபசர் சீனிவாசனின் வீட்டைக் கண்டுபிடிக்க ஆசிரியர் பட்ட துயரங்களை எழுதுக.

**45.** பின்வரும் பாடலைப் படித்து ஆசிரியர் குறிப்பு, திரண்ட கருத்து, மையக்கருத்து ஆகியவற்றை எழுதுக.

ஆக்கம் வேண்டுமெனில் நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா – ஓயாது
உழைக்க வேண்டுமப்பா !
உண்ணும் உணவுக்கும் – இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை – நம்பி
வாழ்தல் வாழ்வாமோ ?

*- கவிமணி*

**அல்லது**

பின்வரும் பாடலில் அமைந்துள்ள நயங்களில் **ஏதேனும் ஐந்தை** (எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம், அணி) மட்டும் விளக்கி எழுதுக.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்குதொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

*- பாரதிதாசன்*

**46.** பழமொழியை விளக்கி, வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்

**அல்லது**

சிறுதுளி பெருவெள்ளம்

**அல்லது**

கீழ்க்காணும் தலைப்பில் (மரபு/புது) கவிதை எழுதுக.

"தாயன்பு"

**அல்லது**

"செந்தமிழ்"

**47.** தமிழாக்கம் தருக.

(அ) Prevention is better than cure

(ஆ) Calm before the storm

(இ) Face is the index of the mind

(ஈ) Indian people always dislike violence

(உ) An ideal teacher is a friend, Philosopher and guide of the students

**அல்லது**

(அ) To the good people, world appears good.

(ஆ) Take up new challenges when they arise. New experiences will help you grow.

(இ) Madurai is known as city of temple.

(ஈ) Look before you leap.

(உ) Kindness cannot be bought.

-o O o-